IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO.105/2021

Deposition of Witness for P.W.14

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.முருகன் |
| FATHER NAME | - | திரு.வேணுகோபால் |
| VILLAGE | - | தோட்டப்பாளையம், வேலூர் |
| TALUK | - | |
| OCCUPATION | - | வெல்டர் |
| AGE | - | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 31.07.2025.

எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை –</u>

நான் தோட்டப்பாளையத்தில் குடியிருக்கிறேன். வெல்டர் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன வேலு எனது மாமா ஆவார். எனது அக்கா வீட்டுக்காரர் தான் வேலு. 04.01.2021 அன்று வேலு காணாமல் போனார். வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். எனது அக்கா நாங்கள் 5,6 நாட்களாக தேடிக் கொண்டிருந்தோம். வேலூர் முத்துமண்டபம் எரி மேடையில் கௌதம் என்ற வாட்ச் மேன் எனக்கு தெரிந்தவர். கௌதம் எனக்கு மேற்படி சுடுகாட்டில் கால் மட்டும் வெளியே தெரியும் படி மனித உடல் புதைந்திருப்பதாக தகவல் சொன்னதின் பேரில் நான், எனது அக்கா, அக்கா மகன் சிலம்பு சென்று பார்த்தோம் அங்கு போலீசார் , தாசில்தார் இருந்தார்கள். அவர்கள் முனனிலையில் 11.01.2021 அன்று காலை 7.30 மணிக்கு உடலை தோண்டி எடுத்தார்கள். பிரேதத்தைப் பார்த்து பிரேதத்தின் உயரம், உடல் பருமன் ,அணிந்திருந்த சட்டை வைத்து நான்

மற்றும் எனது அக்கா, அக்கா மகன் மேற்படி பிரேதம் வேலு தான் என அடையாளம் காட்டினோம். அவரது உடலில் இடது பக்க நெஞ்சில் கத்திக்குத்து, இடது பக்க வயிற்றில் 3 கத்திக்குத்து, இருந்தது. வலது முழங்கை வெட்டப்பட்டு இருந்தது. வலது கால் விரல்கள் முழுவதுமாக துண்டிக்கப்பட்டிருந்தது. வலது தொடையில் ஒரு கத்திக்குத்து இருந்தது. உடல் அழுகிய நிலையில் புழு வைத்து துர்நாற்றம் வீசியது. பிரேதத்தை எடுத்து மேலே வைத்து அங்கேயே பிரேத பரிசோதனை செய்தார்கள். பின்னர் உடலைப் பெற்று நல்லடக்கம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை –</u>

அந்த இடத்தில் பொது மக்கள் தோராயமா 20 பேர் இருந்தார்கள். பிரேதம் அடையாளம் தெரியாதவாறு அழுகிய நிலையில் இருந்ததா என்றால் அடையாளம் தெரியுமாறு இருந்தது. இறந்து போன வேலு எப்போது வீட்டிலிருந்து சென்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அடையாளம் காட்டிய பிரேதம் எனது மாமா வேலுவே கிடையாது என்றும் அது வேறோரு அடையாளம் தெரியாத பிரேதம் என்றால் சரியல்ல. நான் இறந்து போனதாக சொல்லப்படும் வேலு எனது மாமா என்பதால் எனது அக்காவிற்கு ஆதரவான பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. V. murugan

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 31.07.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

(signature) 31.7.25

**Additional District Judge(FTC)**
**Vellore.**